# ஔவை, பாரதி ஆத்திச்சூடிகளில் கருத்துநிலை மாற்றங்கள்

வாழ்க்கைக்கு ஆதாரமானதாக, அடிப்படையானதாக இருக்கும் அறக்கருத்துக்கள் வாழ்வியல் தளத்திலிருந்து வரும் இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஓரிரு கருத்துக்களை முன்வைக்கும் இலக்கியங்களுண்டு. சில கருத்துக்களை மட்டும் சொல்பவையுமுண்டு. மாறாக அறக்கருத்துக்களின் தொகுதியான நூல்களுமுண்டு. இது அறக்கருத்துக்களின் வளர்ச்சிநிலையைக் காட்டுகிறது. தமிழில் ஔவையாரால் பாடப்பட்ட ஆத்திச்சூடியையும் பிற்காலத்தில் பாரதியாரால் பாடப்பட்ட ஆத்திச்சூடியையும் ஒப்பிட்டு காலமாற்றம் ஏதேனும் கருத்துமாற்றங்களை ஏற்படுத்தி இருக்கிறதா என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அறம்:**

அறம் என்ற தமிழ்ச்சொல் ஆங்கிலத்தில் எத்திக்ஸ் எனப்படும். சமஸ்கிருதத்தில் 'தருமம்' என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. அறம் என்ற சொல்லுக்கு புண்ணியம்,சமயம், ஞானம், அறச்சாலை, நோன்பு, தகுதியானது, தருமதேவதை, யமன் எனப் பல பொருட்கள் உண்டு. அறம் என்ற சொல் அற்றம் என்பதிலிருந்து வந்திருக்கலாம் என்கிறார்கள். அற்றம் என்பதற்கு இறுதி என்று பொருள். வாழ்விற்கு இறுதியானது அறம். வேறு சிலர் அறு என்ற அடிச்சொல்லிருந்து அறம் வந்திருக்கலாம் என்கிறார்கள்.; அறு என்பதற்கு வழி என்பது பொருள். வழிகாட்டுதல் தான் அறம் என்றானது என்கிறார்கள்.

**அறம்-விளக்கம்**

அறம் என்பதற்கு "ஒரு மனிதக்குழு தனக்குள் உருவாக்கிக் கொள்ளும் நெறிகள், இறுதியாக வகுத்துக்கொண்ட நடத்தைகள், செய்யக் கூடியவை, செய்யக்கூடாதவை, செய்தே ஆகவேண்டியவை அடங்கிய ஒரு வழிகட்டித் தொகை" என விளக்கம் தருகிறார் ஜெயமோகன். எனில் ஒரு சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு அறத்தை மற்றொரு சமூகம் ஏற்காமலிருக்கலாம். ஆனால் சில அறங்கள் எல்லாச் சமூகத்திற்கும் பொதுவானவையாக இருக்கும். எனவே அறம் என்பது மாறக்கூடியது, மாறாதது என்ற இரு இயல்புகளை உடையது என அறிய முடிகிறது.

எந்தச் சூழலிலும் எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும் பொருந்தக்கூடியவை பேரறங்கள். இடத்திற்கு இடம் ,சமூகத்திற்கு சமூகம் ,காலத்திற்குக் காலம் மாறுதலைச் சந்திக்கக்கூடியவை சிற்றறங்கள்.

நிலைத்தவையும் மாறியவையுமான அறக்கருத்துக்களின் தொகுப்பாகவே தமிழில் அற இலக்கியங்கள் விளங்குகின்றன.

**தமிழில் அற இலக்கியங்கள்:**

சமண பௌத்த நன்னெறிகளே இந்தியச் சமூகத்தில் அறங்களாக போதிக்கப்பட்டு வந்துள்ளன. சங்க இலக்கியத்தில் அறம் என்ற சொல்லும் பாடல்களில் சிறந்த வாழ்வியல் கருத்துக்களும் இடம் பெற்றிருக்கின்றன. ஆனாலும் சமணம், பௌத்தம் செல்வாக்கு பெற்றிருந்த காலத்தில்தான் பேரறங்கள் இலக்கியச் செல்வாக்குப் பெற்றன. பதினெண் கீழ்க்கணக்கில் பதினோரு நூல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவற்றில் இடம் பெற்ற அறக்கருத்துகள் சிறந்த சான்றுகளாக அமைந்துள்ளன. உலக மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்ட பெருமை கொண்ட திருக்குறளில் அறம் என்ற சொல் பல இடங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளது. சான்றாகச் சில அதிகாரத்தலைப்புகள் இல்லறவியல், துறவறவியல், அறன் வலியுறுத்தல். பதினெண்கீழ்கணக்கு அறநூல்கள் பல அறக்கருத்துக்களைப் பட்டியல் இடுகின்றன.

.

மனதில் உருவாகும் எண்ணங்களே சொல்லாகவும் செயலாகவும் பரிணமிக்கின்றன. .அதனாலேயே

“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற”(34)

” அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்றது அறம்” [குறள்-35]

என அறத்தை வரையறுக்கிறார். வள்ளுவர். எண்ணத்தின் களனாக அமையும் மனம் தூய்மையானதாக இருக்க வேண்டும் .அதிலிருந்தே உயர்ந்த அறச்செயல்கள் உருவாகும்.

‘அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்’ என்ற அறக்கருத்துக்களை வலியுறுத்தியது சிலப்பதிகாரம். பௌத்தக் காப்பியமான மணிமேகலை

”அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்

மறவாது இதுகேள் மன்உயிர்க்கு எல்லாம்

உண்டியும் உடையும் உறையுளும் அல்லது

கண்டது இல்” [ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை,228-231]

அறத்தை உணவு, உடை, இருப்பிடம் என்ற அடிப்படைத் தேவைகளாகக் காட்டுகிறது.

இடைக்காலத்தில் நிறைய நீதி நூல்கள் எழுதப்பட்டன. அருங்கலச் செப்பு, அறநெறிச்சாரம், நீதிநெறி விளக்கம், நன்னெறி, உலகநீதி, ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்றவை முக்கியமானவை. பிற்காலத்தில் சதக இலக்கியங்கள், சூடி இலக்கியங்கள் ,விவேக சிந்தாமணி போன்றவை நீதிக் கருத்துக்களை எடுத்துரைத்தன. அந்த நூல்களில் இடைக்காலத்தில் ஔவையார் எழுதிய ஆத்திச்சூடியையும் பிற்காலத்தில் பாரதியார் எழுதிய புதிய ஆத்திச்சூடியையும் ஒப்பிடலாம்.

**ஔவையாரின் ஆத்திச்சூடி**:

. இதன் காலம் 13 ஆம் நூற்றாண்டு. மன்னராட்சி உச்சம் பெற்று வீழ்ச்சியடைந்த காலகட்டத்தில் நிறைய நீதிநூல்கள் உருவாகின. நன்னெறிக் கருத்துக்களை குழந்தைகள் மனதில் ஊன்றச் செய்ய வசதியாக அகரவரிசைப்படி எளிமையாக எழுதப்பட்டது ஆத்திச்சூடி

**பாரதியாரின் புதிய ஆத்திச்சூடி**:

20 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் எழுதப்பட்டது புதிய ஆத்திச்சூடி. ஜனநாயக சிந்தனைகள் மேலெழுந்த காலம். விடுதலைப் போராட்ட உணர்வும் சமூக சீர்திருத்தச் சிந்தனைகளும் பரவியிருந்த காலத்தில் ஔவையாரின் ஆத்திச்சூடியைத் தழுவி எழுதப்பட்டது புதிய ஆத்திச்சூடி.

**ஒப்பீடு**:

பெண்களை சுய அறிவு இல்லாதவர்களாக, ஆணின் விருப்பத்தைத் தன் விருப்பமாகக் கொள்வதுதான் பெண் அறம் என்று நிலைநிறுத்தப்பட்ட காலத்தில் ஒரு பெண்ணாக இருந்தபோதும் “ தையல் சொல் கேளேல்” என்கிறார் ஔவையார். பாரதியாரோ “தையலை உயர்வு செய்” என்று பெண்ணை மதிக்கச் சொல்கிறார்.

”இயல்வது கரவேல்” ,“ஈவது விளக்கேல்”, என்று சொல்லும் ஔவையாரே ”பொருள்தனைப் போற்றிவாழ்” என்றும் கூறுகிறார். கொடுக்கும் குணத்திலிருந்து விலகி விடாதே, கொடுக்க முடிந்த பொருளை மறைக்காதே

என்று சொல்லிவிட்டு பொருளை கவனமாகப் பாதுகாத்து வை என்று முரண்படுகிறார். பாரதியார் “ஈகை திறன்” எனும்போது ஈகையை ஒரு உயர்ந்த குணம் என்பதோடு நிறுத்திக் கொள்கிறார்.

”முனைமுகத்து நில்லேல்” போர்முனையிலிருந்து விலகி நிற்க ஔவை சொல்லக்காரணம் பேரரசுகளுக்கிடையே நடந்த போர்களும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகளும்தான் .விடுதலைப்போரட்டத்தில் மக்களை ஈடுபடுத்தவேண்டி ”போர்த்தொழில் பழகு”,”ரொளத்திரம் பழகு” என்கிறார் பாரதியார்.

**முடிவுரை:**

ஔவையார், பாரதியார் இருவரது ஆத்திச்சூடிகளை ஒப்பிடும்போது இலக்கியம் எழும் காலம் அறக்கருத்துக்கள் உருவாவதற்கும் அக்கருத்துக்களில் மாற்றங்கள் ஏற்படுவதற்கும் காரணமாக அமைகிறது. எனவே அறக்கருத்துக்கள் மாறக்கூடியவை என்பது உறுதியாகிறது.

**-சுதந்திர தேவி ஜோ உ.**